மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.80/2018

வாக்குமூலம்: வா.சா.1– வித்யாசங்கர்

27.02.2024: சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமானத்தின்பேரில் குறுக்கு வி சாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :– 1ம் பிரதிவாதியும், நானும் உறவினர்கள். தாவா சொத்துக்கு வாதி, 1, 6ம் பிரதிவாதி தவிர மற்ற வேறு தரப்பினர்கள் உள்ளனர் என்றால் சரிதான். அவர்களும் இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் ஆவார்கள். தாவா சொத்துக்கு மனைவரி பட்டாவில் 1ம் பிரதிவாதி பெயரும் உள்ளது என்றால் சரிதான். ஆதியில் தாவா சொத்தானது கணியூர் கிருஷ்ண அய்யருக்கு பாத்தியப்பட்டது. கிருஷ்ணஅய்யர் 1988 ல் இறந்த பிறகு வெங்கட கிருஷ்ணன், ராமசாமி, வரதராஜன் ஆகியோருக்கு கூட்டாக பாத்தியப்பட்டு அவர்களுடைய அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அவர்கள் மூன்று பேரும் கடந்த 10.12.1923ம் தேதி ஆவண எண்.2878/1923 என்ற பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். அந்த பாகப்பிரிவினையில் பி ஷெட்யூல் சொத்தை தவிர வேறு சொத்துக்களும் கண்டிருந்தது என்றால் சரிதான். அந்த சொத்துக்களின் நிர்வாகத்தை பற்றி பாகவிஸ்தி பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. மூத்த ஆண் வாரிசுகள் தான் நிர்வாகம் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம்பிரதிவாதியின் பாட்டானார் இன்சால்வென்ட் கொடுத்ததற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்பதை நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. கடந்த 26.02.2010ம் தேதி ஆவண எண்.510/2010ன் மூலம், வாதி, 6ம் பிரதிவாதி, 1, 2, 4ம் பிரதிவாதிகள் மூன்றாம் நபருக்கு கிரையம் செய்துக்கொடுத்துள்ளீர்கள் என்றால் இல்லை. அதேபோல இந்த பிரதிவாதி மற்றும் 6ம் பிரதிவாதி மற்றும் வாதிகள்சேர்ந்து ஆவண எண்.826/2016 டி.எஸ்.958/1 உள்ள 1 சென்ட் நிலத்திற்கு கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான். அதேபோல டி.எஸ்எண்.985/1–ல் ஆவண 925/16 –ல் 40 சென்ட் நிலத்தை கிரையஉடன்படிக்கை எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை எல்லாம் 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது 1ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்று சொல்லுவது சரியல்ல என்றால் அவர்தனியாக உடன்படிக்கை ஏற்படுத்திக்கொடுக்க தான் எங்களுக்கு ஆட்சேபணை. கடந்த 02.04.2017ம் தேதியில் வாதி, 1, 6ம் பிரதிவாதிகள் சேர்ந்து தாவா சொத்துக்கள் எம்.சௌந்தர்ராஜன், பொன்ராஜ், சி.ஜெய்கணேஷ்,

முனீஸ்வரன் ஆகியோர்களுக்கு ஒப்பந்தம் எழுதிக்கொடுத்து இரண்டு இலட்சம் ரூபாய் முன்பணம் பெற்றுக்கொண்டு மாத வாடகை என நிர்ணயம் செய்து சுவாதீனமும் ஒப்படைப்பு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதிகளுக்கு தெரியாமல் வேறு நபர்களுக்கு தாவா சொத்தை கிரையம் கொடுக்க சம்மதித்து முன்பணம் பெற்றுக்கொண்டதால் தங்கள் மீது பல வழக்குகள் தொடரப்பட்டது என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதி மூத்த ஆண் வாரிசுகள் என்ற முறையில் 2436/2017 ஆவணத்தை ஆட்சேபணை செய்ய உங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு உரிமை உள்ளது. மேற்படி கிரைய ஆவணத்திலேயே 1ம் பிரதிவாதி மற்ற கிரையதாரர்களையும் சேர்த்து நான் பதிந்து கொடுப்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தொடருவதற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>8, 9ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-</u> 12.05.1894ல் உயில்படி மூத்த ஆண் வாரிசு சொத்தை நிர்வாகம் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டள்ளது என்றால் சரிதான். ஆனால் உரிமை என்று பார்த்தால் வாழ்ந்து வரும் அனைத்து ஆண் வாரிசுகளும் உரிமை உண்டு என்றால் சரிதான். சுந்தர்ராஜ அய்யர் இறந்தபிறகு அவருடைய மூத்த ஆண் வாரிசு கே.எஸ்.ராமமூர்த்தி என்பவர் நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரிதான். கே.எஸ்.ராமமூர்த்தி இறந்தபிறகு மூத்த ஆண் வாரிசு என்ற முறையில் கே.எஸ்,சந்திரசேகரன் என்பவர் நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. கே.எஸ்,இராமமூர்த்தி இறந்த பிறகு மூத்த ஆண் வாரிசு யார் என்றால் கே.வி.கோபாலகிருஷ்ணன். உங்களுடைய உயில்சரத்துப்படி ஆண் வாரிசு தான் சொத்தை நிர்வாகித்து வரவேண்டும் என்று சரத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். கே.வெங்ககிருஷ்ணனுடைய மகன் வி.ராஜகோபால். மேற்படி ராஜகோபாலுக்கு ஆண் வாரிசுகள் யாரும் இல்லை. இறந்து விட்டார். ராஜகோபாலுக்கு சகோதரிகள் விசலாட்சி மற்றும் தங்கம்மாள். அந்த பெண் வாரிசு தங்கம்மாள் வழி வந்தவர்கள் தான் கோபாலகிருஷ்ணன் என்றால் சரியல்ல. எந்த ஆண் வாரிசுடைய மகன் என்றால் கே.ஆர்.வெங்கட்ராமனுடைய மகன். கே.எஸ்.சந்திரசேகர் என்பவர் மூத்த உறுப்பினர். அவர் இறக்கும் வரை அவர் தான் இந்த சொத்தை நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்து கே.சி.இராமசுந்தரம், கே.ஜி.வெங்கட்ராமன், கே.ஆர்.சந்திரமௌலி, கே.ஆர்.ஸ்ரீராம், கே.ஆர்.சீதாராமன், கே.எஸ்.கணேஷ், கே.எஸ்.கிருஷ்ணன், கே.வித்யசங்கர், மற்றும் வி.இராமகிருஷ்ணன் ஆகியோருக்கும் சொத்தில்

உரிமை உள்ளது என்றால் சரிதான். பட்டாவில் ஆறு நபர்கள் பெயர்தான் உள்ளது. அது அல்லாமல் இவர்கள் அனைவருக்கும் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். பழனி கிராமத்தில் இருக்கிற 8 ஏக்கர் 20 சென்ட் நிலத்தை கிரையம் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆகும். பட்டாவில் அல்லாத மேற்சொன்ன அனைவரும் சேர்ந்து தான் அந்த ஆவணத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரிதான். இந்த உயிலுக்கு கட்டுப்பட்ட நிர்வாகம் சம்மந்தமாக கோயம்புத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.384/2006 என்ற வழக்கை நானும், வாதிகளும், 1, 6 பிரதிவாதிகளும் கூட்டாக சேர்ந்து தான் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். சுந்தர்ராஜ அய்யர் வாரிசுதாரர்கள் வரியா நிலையராக ஆனதால் அவருடைய வாரிசுதாரர்கள் சேர்க்கவில்லை என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுந்தர்ராஜ அய்யர் வாரிசுகள் சேர்ந்து தான் கிரைய ஆவணத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரிதான். 6 பெயர்கள் தான் பட்டாவில் உள்ளது. அதை நீக்கறவு செய்து அனைவருடைய பெயர் சேர்க்க வேண்டி ஆர்.டி.ஓ.விடம் மனு செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. கே.எஸ்.சந்திரசேகர் இறந்த பிறகு 8ம் பிரதிவாதியாகிய அவர் மகன் 6 பெயர்கள் தான் பட்டாவில் உள்ளது. அதை நீக்கறவு செய்து அனைவருடைய பெயர் சேர்க்க வேண்டி ஆர்.டி.ஓ.விடம் மனு செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். அது சம்மந்தமாக விசாரணை தற்போது நிலுவையில் இருந்து வருகிறது. தாவா அக்ரிமென்ட் சம்மந்தமாக பழனி மாவட்ட பதிவாளர் அவர்கள் ந.க.எண்.916/அ1 உத்தரவில் கிரைய உடன்படிக்கை ஆவணம் செய்து அதனை 2436/2017 ஆக பதிவு செய்துள்ளதை ஏற்புடையது அன்று என்னால் தீர்மானிக்கப்படுகிறது என்றால் சரிதான். பழனி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.276/2017 மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.107/2016 ஆகிய வழக்குகள் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி மற்ம் 8ம் பிரதிவாதி , 9ம் பிரதிவாதி ஆகேியோர்களக்கு உரிமை உள்ளது என்றும், இவர்களுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவது சரியல்ல என்றும், அதனால் 8ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமையை அனுமதி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் இந்த பிரதிவாதிகளை பொறுத்து கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை –</u> இந்த வழக்கு சம்மந்தமாக டி.ஆர்.ஓ போட்ட உத்தரவில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை பதிவு அலுவலர்கள் தனிச்சையாக ரத்து

செய்யும் அதிகாரம் பதிவு சட்ட விதிகளில் வழங்கபபடவில்லை என்ற் காரணத்தால் சம்மந்தப்பட்ட கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட மேற்கொண்ட இரத்து ஆவணம் எழுதி தாக்கல் செய்யப்படுமேயனால் பதிவு மேற்கொள்ளப்படும். அவ்வாறு இல்லாநிலையில் நீதிமன்றம் மூலம் இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மனுதாரருக்கு தெரியபடுத்துகிறது என்று சொன்னதால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K KARTHIK

Digitally signed by K KARTHIK
Date: 2024.02.27 12:57:44 +0530

District Munsif,

Palani.